# யாழ்ப்பாணக் கல்வி வலயம்

## முதலாந்தவணைப் பரீட்சை - 2016

## குடியியற் கல்வி

488

தரம்: 07

சுட்டெண் :..........................................

நேரம்: 1.30 மணித்தியாலம்

### பகுதி - I

❖ 1 - 20 வரையான வினாக்களிற்கு மிகச் சரியான விடையின் கீழ் கோடிடுக.

01) மனிதன் பிறந்ததும் முதன் முதலில் உறுப்பினராகும் சமூக அலகாக அமைவது
1) குடும்பம் 2) சமூகம் 3) பாடசாலை 4) ஆலயம்

02) மனிதன் நற்பிரஜையாக வாழ்வதற்கு மிகவும் அவசியமானது
1) பணம் 2) பதவி 3) நற்பழக்க வழக்கம் 4) குலம்

03) பல குடும்பங்கள் ஒன்றிணைந்து உருவாகுவது
1) கிராமம் 2) சமூகம் 3) பாடசாலை 4) நகரம்

04) தனிக்குடும்பத்தை குறிக்கும் வேறு பெயர்
1) விரிவான குடும்பம் 2) கூட்டுக்குடும்பம்
3) புதுக்குடும்பம் 4) கருக்குடும்பம்

05) வாழ்க்கையின் முன்னேற்றத்துக்கு அவசியமானது
1) நூல்கள் 2) சினிமா 3) தீயோர் நட்பு 4) போதைப் பொருள்

06) கல்வியை வழங்குவதும், நல்ல பிரஜைகளை உருவாக்கி தரும் சிறந்த இடமாக அமைவது
1) கோயில் 2) குடும்பம் 3) பாடசாலை 4) சமூகம்

07) கிறிஸ்தவர்களின் வழிபாட்டுத் தலமாக அமைவது
1) கோயில் 2) பள்ளிவாசல் 3) விகாரை 4) தேவாலயம்

08) விளையாட்டில் ஈடுபடுவதால் ஒருவரிடம் விருத்தியாகும் பண்பாக அமைவது
1) வெற்றி தோல்வியை சமமாக மதித்தல்
2) சட்டத்தை மதிக்காத தன்மை
3) கட்டளைகளைப் பின்பற்றாமை
4) சோர்வாக இருத்தல்

09) பரீட்சையில் சித்தியடைந்த ஒருவரிடம் தோன்றும் மன எழுச்சியாக அமைவது
1) பயம் 2) கோபம் 3) மகிழ்ச்சி 4) கவலை

10) பொதி செய்யப்பட்ட உணவுப் பொருட்களைக் கொள்வனவு செய்யும் போது நாம் கவனிக்க வேண்டிய மிக முக்கியமான விடயம்
1) பணம் 2) நிறை
3) அடங்கியுள்ள விற்றமின்கள் 4) காலாவதியாகும் திகதி

11) நற்பிரஜை ஒருவரிடம் காணப்படும் குணவியல்புகளாக அமைவது
1) நேர்மை, பொறுமை 2) நேர்மை, பொறாமை
3) சுயநலம், பொதுநலம் 4) கருணை, கோபம்

12) உமது தந்தையின் சகோதரியை நீங்கள் அழைக்கும் முறை
1) சித்தி 2) பெரியம்மா 3) மாமி 4) சின்னம்மா

13) மூன்று தலைமுறைகள் சேர்ந்து வாழும் குடும்பம்
1) தனிக்குடும்பம் 2) கூட்டுக்குடும்பம்
3) கருக்குடும்பம் 4) புதுக்குடும்பம்



kalvi.lk

14) குழுவாக வேலைசெய்யும் சந்தர்ப்பம்

1) சிரமதானம் 2) தேங்காய் பறித்தல் 3) ஆசிரியர் 4) பூப்பறித்தல்

15) இலங்கையில் வாழும் பெரும்பான்மை இனம்

1) தமிழர் 2) சிங்களவர் 3) முஸ்லீம் 4) பறங்கியர்

16) சாச்சா என அழைக்கப்படும் நபராக அமைபவர்

1) அப்பா 2) தாத்தா 3) சிறிய தந்தை 4) பெரிய தந்தை

17) நீண்ட காலமாகப் பேணப்பட்டு வரும் பழக்க வழக்கங்கள் அழைக்கப்படும் பெயர்

1) சம்பிரதாயங்கள் 2) தொழில்நுட்பம் 3) காப்புறுதி 4) மூர்த்தம்

18) குடும்பங்களில் காணப்படும் பிரதான சவாலாக அமைவது

1) அன்பு, அரவணைப்பு 2) பெற்றோர் தொழில் செய்தல்

3) உறுப்பினர்களிடையே ஒற்றுமை 4) விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு

19) வடமாகாணத்தில் அமைந்துள்ள மாவட்டங்களின் எண்ணிக்கை

1) 5 2) 4 3) 3 4) 2

20) மன எழுச்சிகளை கட்டுப்படுத்திக் கொள்ள பின்பற்ற வேண்டியமுறை

1) தியானம் செய்தல் 2) சண்டை பிடித்தல்

3) அழுதல் 4) கோபப்படுதல்

(20x2=40புள்ளிகள்)

## பகுதி - II

❖ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

(01) 1) முதலாம் தவணையில் எமது குடும்பம் எனும் பாடத்தில் நீர் செய்த கணிப்பீட்டு வகைகள் இரண்டு தருக?

2) கணிப்பீட்டுக்குப் பயன்படுத்திய தர உள்ளீட்டுப் பொருட்கள் 3 தருக?

3) இக் கணிப்பீட்டை மேற்கொண்டதால் நீர் பெற்றுக்கொண்ட நன்மைகள் 3 தருக?

4) இக்கணிப்பீட்டை மேற்கொள்ளும்போது நீர் எதிர் கொண்ட சவால்கள் 3 தருக?

(12புள்ளிகள்)

(02) 1) குடும்பத்தின் இரு பிரதான வகைகளும் எவை?

2) கருக்குடும்பம் என்றால் என்ன?

3) விரிவான குடும்பத்தின் சிறப்பம்சங்கள் 3 தருக?

4) குடும்பமொன்றில் காணப்படும் சிறப்பம்சங்கள் 3 தருக?

(12புள்ளிகள்)

(03) 1) ஓய்வு நேரத்தைப் பயனுள்ளதாக்கும் வழிகள் 3 தருக?

2) விளையாட்டில் ஈடுபடுவதால் ஒருவரிடம் விருத்தியடையும் பண்புகள் 3 தருக?

3) அழகியற் செயற்பாடுகளில் ஈடுபடுவதால் கிடைக்கும் பயன்கள் 3 தருக?

(12புள்ளிகள்)

(04) 1) மன எழுச்சிகள் 3 தருக

2) மன எழுச்சிகள் ஏற்படும் போது வெளிப்படுத்தும் உணர்வுகள் எவை?

3) மன எழுச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொள்வதற்குப் பின்பற்ற வேண்டிய செயற்பாடுகள் 3 தருக.

(12புள்ளிகள்)

(05) 1) வருமானத்தைப் பெறுவதற்கு மேற்கொள்ளும் தொழில்கள் 3 தருக?

2) குடும்பத்தினால் உமக்கு கிடைக்கும் உரிமைகள் 3 தருக?

3) நற்பிரஜை ஒருவரிடத்தில் காணப்பட வேண்டிய குணவியல்புகள் 3 தருக?

(12புள்ளிகள்)



kalvi.lk

## தரம் 01 - 10

# 3ம் தவணை

**REVISION | PAPER DISCUSSION**

## ஆரம்பம் - 01.12.2024

மீட்டல் மற்றும் வினாத்தாள் கலந்துரையாடல் வகுப்புகள்

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் இணைந்து கொள்ள முடியும்.

**JOIN NOW**

## புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன..

### கட்டண விபரங்கள்

**தமிழ் Medium**

| | |
|---|---|
| தரம் 01-02 | 2000/= |
| தரம் 03-05 | 2500/= |
| தரம் 06-10 | 3000/= |

**English Medium**

| | |
|---|---|
| தரம் 06-07 | 3500/= |

Education கல்வி අධ්‍යාපන

KALVI.LK

WHATSAPP

**075 287 1457**